செய்தி வெளியீடு எண்.03-2016 நாள்: 02.10.2016

அண்ணல் காந்தியடிகளின் 148-வது பிறந்த நாள் விழா - அண்ணல் காந்தியடிகள் திருவுருவ படத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணயின்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.10.2016) மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மற்றும்

கதர் சிறப்பு விற்பனையை தொடங்கி வைத்து, அண்ணல் காந்தியடிகளின் சுதந்திர போராட்ட காலச் சின்னமாக திகழும் கதர் ஆடையினை அனைவரும் வாங்கி கதர் நெசவாளர் வாழ்வாதாரத்தை உயர்த்த மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்.

******

விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மகளிர் சுய உதவிக்குழு பூமாலை வணிக வளாகத்தில், அண்ணல் காந்தியடிகளின் 148-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அண்ணல் காந்தியடிகளின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மற்றும் தமிழ்நாடு கதர் கிராம தொழில்கள் துறை சார்பாக விழுப்புரம் மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையையொட்டி 30 சதவீத கதர் சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.10.2016) தொடங்கி வைத்தார்.

கதர் சிறப்பு தள்ளுபடி விற்பனையை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

கதர் ஒரு வாழ்க்கை தத்துவம். கதர் என்பது வெறும் நூல் இழைகளால் ஆன துணி மட்டுமல்ல, அது சுதந்திர போராட்ட காலத்தில் போராட்ட வீரர்களுக்கு கிடைத்த ஒரு பேராயுதம். இன்றைய கணினி யுகத்தில் கோடான கோடி அடிதட்டு மக்களுக்கு கிடைத்த அட்சைய பாத்திரம் இந்த கதர் தொழிலால் வேலையில்லா திண்டாட்டத்தை விரட்டி அடிக்க முடியும்.

நீங்கள் அணியும் கதராடைகளால் பலஅடிதட்டு மக்களின் அன்றாட வாழ்வு நடக்கிறது என்பதை உணருங்கள். இன்று நீங்கள் வாங்கும் கதராடைகளால் ஏழை மக்களின் எதிர்காலம் விடிகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தமிழ் நாட்டில் பல இலட்சக்கணக்கான ஏழை எளிய நூற்போர், நெய்வோர்களுக்கு இடையறாத வேலைவாய்ப்பை அளிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பேருதவி செய்து வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராம தொழில்வாரியம், தமிழ்நாட்டில் பல லட்சக்கணக்கான ஏழை எளிய நூற்போர்கள் மற்றும் நெசவு செய்பவர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பை அளிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பேருதவியாக இருந்து வருகிறது. அண்ணல் காந்தியடிகளின் சுதந்திர போராட்ட கால சின்னமாக திகழும் இக்கதர் ஆடையினை அனைவரும் வாங்கி அணிய வேண்டும்.

எனவே, அண்ணல் காந்தியடிகளின் சுதந்திர போராட்ட காலச் சின்னமாகத் திகழும் இக்கதர் ஆடையினை அனைவரும் வாங்கி அணிய வேண்டியது ஒவ்வொரு இந்தியரின்

தலையாய கடமையாகும். தேசிய தினங்களாகிய சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தியடிகளின் பிறந்த தினம் மற்றும் தேசியத் தலைவர்களின் நினைவு தினம் ஆகிய தினங்களில் கதராடை அணியுங்கள். அரசு ஊழியர், ஆசிரியர் பெருமக்கள் ஒவ்வொருவரும் ஒரு கதராடையாவது வாங்கி வாரத்தில் ஒரு நாள் அணிந்து கதர் நெசவாளர் குடும்ப முன்னேற்றத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

விழுப்புரம் மாவட்டத்தில் கதர் விற்பனையில் பட்டு ரகம், உல்லன் ரகம், பாலிஸ்டர் ரகம், கதர் துண்டு, கதர் சட்டை, கதர் வேட்டி, கதர் பட்டு சேலை, ஜமக்காளம், கதர் ஸ்கிரீன் மற்றும் பல்வேறுவிதமான கதர் ஆடைகள், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 30 சதவீத தள்ளுபடியில் விற்பனை செய்யப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்திற்கு இவ்வாண்டு விற்பனை இலக்காக ரூ.102 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து கதர், பாலியஸ்டர் மற்றும் பட்டு இரகங்களுக்கு 30% அரசு தள்ளுபடி வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டைப் போலவே இவ்வாண்டும் மிகச் சிறப்பான இக்கதர் விற்பனையின் போது தங்களுக்குத் தேவையான கதராடைகளை வாங்கி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை எய்திட பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீங்கள் ஆடைகளுக்குச் செலவிடும் மொத்தத் தொகையில் 1% மட்டும் கதராடைகளுக்கு செலவு செய்தாலே இம்மாவட்ட இலக்கினை எய்திட இயலும். உடல் ஆரோக்கியத்திற்கு தூய கதராடையினை அணிந்து இவ்வாண்டு தீபாவளியினை மகிழ்வுடன் கொண்டாடுங்கள். இதுவே நம் சுந்திர போராட்ட தியாகிகளுக்கு நாம் செலுத்தும் நன்றி என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.சரயு,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.